# நெஞ்சுக்கு நீதி நீ!



நெஞ்சுக்கு நீதியுரைக்கின்ற வேந்தே!
நெடுவழியைக் கடந்திடவே கல்லும் முள்ளும்
பஞ்சாகக் கருதியுன்றன் கால்கள் தோய்ந்த
பச்சைரத்தம் பரிமாற்றம் மறந்தா போகும்?
பிணி, வறுமைச் சூழலிலும் கொள்கை கொண்டே
அஞ்சாமல் அயராமல் பணிகள் செய்தாய்!
ஆரூரான் உனைநினைத்தால் உதிரம் கொட்டும்!

திருக்குவளை கண்விழித்த தமிழர் முத்தே!
திராவிடர்தம் வாழ்வுயர்த்த பிறந்த கோவே!
தருக்கரையே அழிப்பதற்கெ முந்த ஞானி!
தலைவன்நம் அண்ணாவின் இனிய தம்பி!
உருக்கிய நல்லொளி வீசும் உயர்ந்த பொன்னாய்
உள்ளமெலாம் தமிழ்வளர்த்த உயிரே! வானில்
பெருக்கற்போல் முளைத்திருக்கும் வெள்ளிக் கூட்டப்
பெரும்படையின் தலைவனேநீ வையம் வாழ்க!

அண்ணாவின் கொள்கைத்தீ அழிந்தி டாமல்
எந்நாளும் வளர்த்திடவே எழுதிப் பேசிக்
கண்ணயராப் பணிசெய்தார்!கட்டிக் காத்தே
கழகத்தை வழிகண்ட கடமை வீரன்!
பண்ணாளும் புலவரெல்லாம் அமுதுப் பேச்சைப்
புகழ்கின்ற செந்தமிழ்ச் சொல் வாய்மைத் தீரன்!
மண்ணாளும் மடையர்கள் சூழ்ச்சி வீழ
மதிசெய்து முடித்திட்ட வல்ல சூரன்!

திரைக்கதையா? நாடகமா? எழுத்து, பேச்சின்
தினத்தாளா? கவிதைகளா? நெஞ்சை ஈர்க்கும்
உரையாடல் யாவையுமே தமிழ்தான் மூச்சு!
உணர்ச்சிதரும் கொள்கைகளில் அணிவ குப்பு!
திருக்குறளின் ஓவியமா? கவிதை கூறும்
சங்ககால இலக்கியமா? இதனில் யாரும்
நெருங்கிடாளம் ஒப்பற்ற தலைவன் நீதான்!
நிமிர்ந்தநடை அரிமாவே கலைஞர் வாழ்க!

சோதனைகள் பலவந்து தாக்கும் போதும்
சிரிப்புடனே முகங்காட்டி வெற்றி கண்டாய்!
வேதனைகள் நெஞ்சத்தைப் பிளந்த பின்னும்
வேங்கையதாய்த் துடித்தெழுந்து பகையைக் கொன்றாய்!
சாதனைகள் செய்தவன்நீ!தமிழர் வாழ்வின்
சரித்திரத்தில் நின்றவன்நீ!அண்ணா தந்த
போதனைகள் ஏற்றவன்நீ!பெரியார் கண்ட
பகுத்தறிவுப் பாசறையைக் காத்தாய் வாழீ!

வயலெல்லாம் விளைச்சலாலே உயிரைக் காக்கும்
வடிவம்தான் நீஎமக்கு நாளும் தோன்றும்!
வயதெல்லாம் நீசெய்த தொண்டைக் கூறும்!
வரலாறு உன்பெயரைச் செதுக்கி வைக்கும்!
புயற்காற்று உன்முன்னர் பலமி ழக்கும்!
பூகம்பம்தன் முடிவை மாற்றிக் கொள்ளும்!
அயல்நாட்டார் குறிப்பெடுத்து நெஞ்சில் போற்றும்
அருளாளன் எம்கலைஞர் வாழ்க நீடே!

காட்டாறு கடந்துவந்த பாதை தோறும்
கழகத்தின் வரலாறு உன்னைக் கூறும்!
கோட்டான்கள் வழிமறித்து நின்ற போதும்
கொள்கைகளின் உறுதியினை உன்னைப் பேசும்!
ஏட்டாலும், பேச்சாலும் செந்நீர் சிந்தி
இனமொழியைக் காத்திட்ட தியாகம் சொல்லும்!
பாட்டாலும் உன்வேர்வை கொஞ்ச மன்று;
பணி செய்து கிடந்ததுதான் உனது தொண்டாம்!

உரிமையினை இழக்கலாமா? தமிழா, உன்றன்
உடம்பினிலே துணியின்றி வாழ லாமா?
நரிக்குணத்தார் பளபளப்பில் மயங்க லாமா?
நம்பெரியார், பேரறிஞர், கலைஞர் தீட்டி
வரைந்திட்ட கொள்கைகளை மறவ லாமா?
வண்டமிழர்க் கூட்டம்நீ வீழ லாமா?
திரியெழுதும் ஒளியைப்போல் நிமிர்ந்து வாழத்
திராவிடமே தளபதியார் தலைமை நிற்பாய்!

**கவிஞர் தமிழ்தாசன்**
கழக தீர்மானக்
குழுத் தலைவர்





நாகை மாவட்டம் தலைஞாயிறு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் மணக்குடியில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் பேசினார். உடன் மாவட்ட கழக துணை செயலாளர் கற்பகம், தலைஞாயிறு ஒன்றிய கழக செயலாளர் மகா.குமார், வேதாரண்யம் நகர கழக செயலாளர் மா.மீ.புகழேந்தி மற்றும் பலர் உள்ளனர்.

## த.வெ.க. அரசின் முதலமைச்சர், விஜய் அல்ல, ஆதவ் அர்ஜூனா தான் நிழல் முதலமைச்சர்

# த.வெ.க. அமைச்சரவையில் உள்ள அனைவருமே ஜோக்கர்கள்!

### மேனாள் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேச்சு!

அரியலூர், ஜூன் 4-

அரியலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மேனாள் அமைச்சர், அரியலூர் மாவட்ட கழக செயலாளர் எஸ்.எஸ்.சிவசங்கர் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்பொழுது பேசியதாவது.



இந்த தேர்தல் தோல்வி, மிக குறிப்பாக கொளத்தூர் தொகுதியில் ஏற்பட்ட தோல்வி திமுகவினரின் ஆழ் மனதில் மாறா வடுவாக பதிந்துள்ளது. திமுக தொண்டர்களை தாண்டி பொது மக்களிடத்திலும், மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இப்படிப்பட்ட ஒருவரை முதலமைச்சராக தவற விட்டு விட்டோம் என்ற எண்ணம் பொதுமக்களின், ஒருசாரார் இடத்தில் ஏற்பட்டிருக்கிறது.

இந்த ஆட்சி மாற்றம் ஏதோ பெரிய மாற்றம் அல்ல 35% பேர் இந்த மாற்றத்திற்கு காரணமாக இருந்துள்ளனர். அதிலும் 20% பேர் அவரது ரசிகர்கள். ஆட்சி மாற்றம் வேண்டும் என புதிய கட்சி உருவெடுக்கும் போதெல்லாம் வாக்களிக்கும் ஒரு சாரார். கடைசி நேர மாற்றமாக குழந்தைகளை மனதில் வைத்து அவர்களை திசை திருப்பி எந்த அளவில் ஆட்சி மாற்றத்தை கொண்டு வர முடியும் என்பதை பேசி கொண்டு வந்தது தான், ஆட்சி மாற்றத்திற்கு காரணமாக இருக்கிறது.

குழந்தைகளுக்கு இனிப்பு மிட்டாய் தருவது போல, இணையத்தில் தொடர்ந்து இனிப்பானவை பேசி வந்த இன்புளுயன்சர்களை தவெக விலைக்கு வாங்கி, திமுக ஆட்சிக்கு எதிரான செய்திகளாக பரப்பி ஆட்சியைப் பிடித்துள்ளனர்.

இந்த ஆட்சி மாற்றம் என்பது நீடித்து நிலைக்காது. இது நீர்க்குமிழி போல, விரைவிலேயே வெடித்து நீர்த்துப்போகும். தற்போது பெற்ற வாக்குகளை மீண்டும் வாங்க முடியாது என்ற காரணத்தினால்தான், அதிமுகவில் இருப்பவர்களை வலை வீசி பிடித்துக் கொண்டுள்ளனர்.

ஆளும் கட்சியாகி, ஆட்சி அமைத்த பின்னும் அதிமுக எம்எல்ஏக்களை விலைக்கு வாங்கி அவர்களை ராஜினாமா செய்ய வைத்து மீண்டும் தேர்தலில் போட்டியிட செய்ய திட்டமிட்டுள்ளனர். மறுபுறம் அதிமுகவின் முன்னாள் எம் எல்ஏக்கள், எம்பிக்களை, மாவட்ட செயலாளர்களை பிடித்துக் கொண்டு போய் தவெகவில் சேர்க்க காரணம், அவர்களிடம் அமைப்பு இல்லை.

அந்த அமைப்பை எப்படியாவது உருவாக்கிவிட தான் ஆதவ் அர்ஜூனா, அதிமுக என்பது இனி தவெகதான் என மாயையை விதைத்துப் பேசி, தவெகவை வலுப்படுத்த முயல்கிறார். ஏனெனில் இதே வாக்கு சதவீதம் தொடராது என அவர்களுக்கு தெரியும்.

தவெக எந்த ஆயுதத்தை கையில் எடுத்து மக்கள் மனதை ஏமாற்றினார்களோ, இன்று அதே ஆயுதம் அவர்களுக்கு எதிராகவே திரும்பி உள்ளது. சமூக வலைதளங்களில் புதிதாக பேசும் இளைஞர்கள் இளம்பெண்களை அதிகம் பார்க்க முடிகிறது அவர்கள் யாவரும் திமுகவோ, திமுகவுக்கு தொடர்புடையவர்களோ கிடையாது.

தவெகவுக்கு இணையம் மூலம் எந்த அளவுக்கு கிராஃப் மேலே ஏறியதோ, தற்பொழுது அதே அளவு கீழ இறங்கி கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட இக்கட்டான சூழலைதான், தவெக சந்தித்து வருகிறது.

தவெகவில் இன்று யார் முதலமைச்சர்? என்றால், அது விஜய் அல்ல. ஆதவ் அர்ஜுனா தான். பின்னாலிருந்து நிழல் முதலமைச்சராக அவர் தான் செயல்படுகிறார் என்பது பட்டவர்தனமாக தெரிகிறது. அவர்கள் அறிவிக்கின்ற திட்டங்கள் எல்லாம், ஏற்கனவே திமுக அறிவித்த திட்டங்களுக்கு பெயரை மாற்றி அறிவிக்கின்றனர்.

விவசாயக் கடன் என்று சொல்லி விவசாயிகளை ஏமாற்றியதை இன்று எல்லோரும் பேசுகிற, விவாதிக்கின்ற அளவிற்கு இந்த செய்தி கீழே சென்று கொண்டிருக்கிறது. அதை முழுமையாக கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பு நமக்கானது.

இந்த தோல்வி திமுக இன்னும் வேகமாக மீண்டு வருவதற்கான, வாய்ப்பாக தான் நாம் பார்க்க வேண்டும். நாம் பார்க்காத தோல்வி அல்ல. 10 ஆண்டு காலம் எதிர்க்கட்சியாக தொடர்ந்து இருந்தோம். திமுக தலைவர் ஸ்டாலின் அவர்களது உழைப்பால் தான், மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றோம்.

ஆனால், ஒரு மாயையை ஏற்படுத்தி ஊடக மாயாஜாலத்தின் மூலமாக, ஒரு குறை பிரசவ வெற்றியை பெற்றுள்ளனர். அது முழு வெற்றி அல்ல. இது நீண்ட நாள் உயிர் தாங்காது. இதை இன்னும் எவ்வளவு மோசமான நிலைக்கு பார்க்க வேண்டுமோ அதை எல்லாம் நாம் பார்க்க வேண்டி உள்ளது.

"பதிமூன்று சீட்டும் ஜோக்கர் ஆகவே உள்ளது போல, தற்போதைய அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் எல்லாருமே ஜோக்கராக உள்ளனர்". இதில் மூத்த அமைச்சர் என்றால் அது செங்கோட்டையன் மட்டும்தான். திமுக உறுப்பினர்கள் கேள்வி கேட்டால் எழுந்து உடனேயே பதில் சொல்லி அமர்ந்து விடுவார். நீண்ட நேரம் அவரால் பதில் சொல்ல முடியாது.

அமைச்சர்களுக்கு இரண்டு மாதம் பேசுவதற்காக பயிற்சி தந்து அதன் பிறகு அமைச்சரவையில் வாய்ப்பு அளித்திருக்கலாம் விஜய். அப்படிப்பட்ட ஒரு நிலையை மக்கள் மனதில் அவர்களை மோசமான நிலையை உண்டாக்கியுள்ளனர் அதை மக்களிடத்தில் கொண்டு சேர்க்க வேண்டிய பணியைத்தான் நாம் செய்ய வேண்டும்.

இந்த தேர்தல் என்பது நமக்கும் ஒரு பாடமாக அமைந்து விட்டது நாம் நல்லவற்றை செய்தோம். எல்லா மக்களுக்கும் திட்டங்களை கொண்டு சேர்த்த என்பது மட்டுமே வெற்றிக்கு உதவாது என்பதை விட, இன்னும் இது போன்று குறுக்கு வழிகளில் வருபவரை தடுக்க வேண்டிய பணியையும் நாம் சேர்த்து செய்ய வேண்டும் என்பதை தான் காலம் நமக்கு பாடமாக தந்துள்ளது. இதையெல்லாம் தாண்டி வருவோம்,மீண்டும் வருவோம்.

இவ்வாறு மேனாள் அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பேசினார்.

## விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம்–தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள் விழா!

### இரா.சேதுநாதன் - முன்னணியினர் பங்கேற்பு!



விழுப்புரம், ஜூன் 4-

கூட்டேரிப்பட்டு தேசிய நெடுஞ்சாலை நான்கு முனை சந்திப்பு அருகில் கழக இரு வண்ணக் கொடிகள் நட்டு பந்தல் அமைத்து அலங்கரிக்கப்பட்ட தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி 103 தாய்மார்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாநிலத் தீர்மானக் குழு உறுப்பினர் மயிலம் தெற்கு ஒன்றிய செயலாளர் இரா.சேதுநாதன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாநிலத் தீர்மானக் குழு துணைத் தலைவர் டாக்டர் இரா மாசிலாமணி மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப.சேகர் ஒன்றியவை தலைவர் ஆர் சுப்பிரமணி ஒன்றிய துணைச் செயலாளர் இந்திரா சுரேஷ் செல்வகுமார் இன்றைய பொருளாளர் ஆறுமுகம்

மாவட்ட கழக பிரதிநிதிகள் கே விஜயன் இ.சசிகுமார், கோபாலகிருஷ்ணன் மாவட்ட அணி அமைப்பாளர்கள் கே எஸ் அன்சாரி, செந்தில்குமார், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கோ.குமார்,

விநாயகபுரம் சங்கர், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வெற்றிச் செல்வன், துணை அமைப்பாளர்கள் சு வெங்கடேஷ், ஆனந்தராஜ், சதாம் உசேன், ஒன்றிய விவசாய அணி கார்த்திகேயன், ஒன்றிய தொண்டரணி சுந்தர்ராஜன், ஒன்றிய இலக்கிய அணி சந்திரசேகர், கிளைச் செயலாளர்கள் டீக்கடை குமார், ஸ்டாலின், சகாதேவன் , அகில்வாணன், ரவி, பூக்கடை அருள், சக்திவேல் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்



தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு தொண்டாமுத்தூர் பேரூர் கழகத்தில் கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி, கழகக் கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர். இதில் தொண்டாமுத்தூர் பேரூர் கழக செயலாளர் டி.வி.குமார், பேரூராட்சி தலைவர் கமலம் ரவி உள்பட பேரூர் கழக நிர்வாகிகள், அமைப்புச்சாரா ஆட்டோ ஓட்டுநர் அணி நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. மல்லூர் பேரூர் கழக தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞரின் 103 வது பிறந்த தினத்தையொட்டி பேரூர் கழக செயலாளர். என். சுரேந்திரன் தலைமையில் இனிப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். உடன் ஏர்வாடி குமார், பூபதி, செங்கோட்டையன், ராமசாமி, செழியன், பாலகிருஷ்ணன், கோவிந்தன், வினோத், கோபி உட்பட கழக நிர்வாகிகள் இருந்தனர்.



புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி மாநகாரட்சிக்குட்பட்ட வார்டு எண் 18, சந்தப்பேட்டையில் வசித்து வந்த பாண்டியம்மாள் என்பவருக்கு சொந்தமான வீட்டில் தீ விபத்து ஏற்பட்டு வீடு முற்றிலும் சேதம் அடைந்தாக தகவல் வந்த நிலையில், அப்பகுதிக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளரை சந்தித்து ஆறுதல் கூறி, அரசு சார்பாக இழப்பீடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி உதவித் தொகை புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா வழங்கினார். இந்நிகழ்வில் தெற்கு மாநகர கழக பொறுப்பாளர் வே. ராஜேஷ், வட்ட கழக செயலாளர், கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.